1993 ஏப்ரல் 1]

203—

மேலை நாடுகளைப்போல் நீருக்கடியில் பிரசவம் என்ற முறையைக் கையாளுதல்.

*10852—டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேலை நாடுகளில் நீருக்கடியில் பிரசவம் (Under Water Birth) என்ற முறையைக் கையாளுவதை இங்கும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தமிழ்நாட்டில் நீருக்கடியில் பிரசவம் என்ற முறை செயல்படுத்த வசதிகள் இல்லாத காரணத்தால் அம்முறையினை செயல்படுத்த ஆய்வு செய்யப்படவில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் நீருக்கடியில் பிரசவம் முறை பயன்படுத்தப்படவில்லை என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் ஏராளமாக நீரும் இருக்கிறது. கர்ப்பிணிப் பெண்களும் இருக்கிறார்கள். ஆகவே, இந்த முறையை பயன்படுத்தலாம். மேலை நாடுகளில் Under Water Birth என்ற முறையில், நீருக்கடியில் பிரசவம் என்ற முறையில் கர்ப்பிணிப் பெண்களுக்குப் பயிற்சியும், ஊக்கமும் கொடுத்து மிக ஆரோக்கியமான குழந்தைகள் பிறக்க வழி செய்கிறார்கள். தாய்மார்களைப் பொறுத்த வரையில் அந்த முறையில் பிரசவ வலி மிக குறைந்த அளவு உள்ளது. பிரசவத்தின் போது வீணாகக் கூடிய இரத்தத்தின் அளவு குறைகிறது. There is reduct ion of blood loss குழந்தைகளைப் பொறுத்தவரை at the mo ent of delivery and at the time of fitst bir h oxygen int ke அளவு அதிகரிக் கிறது. அதாவது குழந்தைகள் முதல் முறையாக மூச்சு இழுக்கும் போது எடுக்கப்படும் ஆக்ஸிஜன் அளவு அதிகமாக இருப்பதால் டைடல் வால்வ் அதிகரிப்பதால், குழந்தைகளின் சுவாச மண் டலம் மிகவும் ஆரோக்கியமாக இருப்பதோடு, மிகவும் வலுவான குழந்தைகளாக வளர்ந்து வருவதாக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள். ஆகவே இதற்குத் தனி ஆயுதங்கள் தேவையில்லை. ஆகவே தமிழ்நாட்டிலும் இந்த முறை உண்டாக்கப்படுமா, அதற்காக ஆராய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே ஒரு பிரசவத்தையே நடத்தி காட்டியிருக்கிறார். அவர்கள் தரையிலே பிறந்தவர் தான். தண்ணீரிலே பிறக்கவில்லை, வலுவாகத்தான் இருக்கிறார். எனவே, தண்ணீரிலே பிறப்பதன் மூலமாக வலுவாக இருப்பார்கள் என்பது ஒருவேலை ஆய்விலே நல்ல முடிவாகக் கூட வரலாம். இது இன்னும் எங்கேயும் முழுமையாக இந்த முறை கடைபிடிக்கப்பட்டதாக தகவல் இல்லை. இன்னும் கூட பல இடங்களிலே, 1981-ஆம் ஆண்டிலிருந்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தான் குறிப்பிலிருந்து தெரிகிறது. பல பத்திரிக்கையிலே வந்த செய்திகளை வைத்துத் தான் சொல்கிறோம். அதற்கு என்ன ஆதாரம் என்று கூடத் தெரியவில்லை. பிரான்ஸ் போன்ற நாடுகளிலே 1981-ஆம் ஆண்டிலிருந்து இன்னும் ஆய்விலே அது இருக்கிறது என்று சொல்கிறார்கள். ரஷ்யாவிலே இருக்கிறது என்று சொல்கிறார்கள்., கனடாவிலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதே போன்று இஸ்ரேல்-லிலே இந்த முறை கடைபிடிப்பதற்கான முயற்சி எடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். நீருக்கடியிலே என்று சொல்லுகிற போது இங்கேகூட எனக்குக் கொடுத்த குறிப்பிலே அந்த தாய்மார்கள் நீச்சல் கற்றுக்கொண்டிருக்க வேண்டும், அந்த உதவியாளர்கள் டாக்டரோ அல்லது மற்ற செவிலியர்களோ என்று சொல்லுகிறபோது அவர்களும் நீச்சல் கற்றுக் கொண்டிருக்கிற அவசியம் ஏற்படுமே என்று இங்கே ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 10–15

ஆனால் அது அப்படியல்ல, என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் கடலோரத்தில் இருக்கிற கடல் நீரும், குழந்தைகள் கர்ப்பப் பையிலே இருக்கிறபோது அங்கே இருக்கிற அம்னியாட்டிக் ஃப்ளூயட் என்று சொல்லப்படுகிற நீரும் ஏறத்தாழ ஒரே தன்மையுடையதாக இருக்கிறது. எனவே அந்தக் கடல் நீரில் வைத்து பிரசவம் செய்கிறபோது அப்போது குழந்தை பிறக்கிறபோது அதற்கு திடீரென்று மாற்றம் ஏற்படாமல் கொஞ்சம், கொஞ்சமாக மாற்றம் ஏற்படுகிற காரணத்தால் அந்தக் குழந்தைக்கு திடீர் ஷாக் இருக்காது என்று சொல்கிறார்கள். எனவே அப்படிப் பட்ட முறையை அவர்கள் சொல்கிறார்கள். எனவே, தண்ணீருக்குள்ளே மூழ்க வைத்து அந்தப் பிரசவம் நடப்பதில்லை. கழுத்தளவு அல்லது இடுப்பளவு தண்ணீரில் உட்கார வைக்கச் சொல்கிறார்கள். அதிலே பெர்த்திங் சேர்' என்று வைத்திருக்கிறார்கள். சீபெட்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். இப்படி தகவல் இருக்கிறது. அதிலே இன்னொன்று கூடச் சொன்னார்கள். டால்ஃபின் இருக்கிறதே, அதையும் அவர்களோடு

1993 ஏப்ரல் 1]

இணைத்து, அதாவது டால்ஃபினையும் கர்ப்பமுற்று இருக்கக்கூடிய தாய்மார்களையும் அங்கே விட்டுவிடுகிறபோது அந்த டால்ஃபின் வந்து அவர்களை நல்ல முறையில் கவனித்துக்கொள்கிறது என்று சொல்கிறார்கள். மேலும் இந்த ஆராய்ச்சி பிரசவத்திற்காகச் செய்யப்பட்ட ஆராய்ச்சியல்ல. நான் சொல்கிற இந்த டால்ஃபின் பற்றிய ஆராய்ச்சி டால்ஃபின் மனிதர்களோடு எப்படிப் பழகுகிறது என்பதைக் கண்டுபிடிக்கச் செய்யப்பட்ட ஆராய்ச்சியாகும் இது. பிரசவம் ஆக இருக்கும் தாயைக் கொண்டுபோய் அங்கே விட்டுவிட்டால் டால்ஃபினையும் அங்கே விட்டுவிட்டால் அந்தக் குழந்தை பிறந்து தண்ணீரில் மூழ்கச் செல்கிறபோது டால்ஃபின் அந்தக் குழந்தையைத் தண்ணீருக்கு மேலே கொண்டு வந்து விட்டுவிட்டு, அந்தத் தாயை இடித்துத் தள்ளுகிறது என்று ஒரு புத்தகத்தில் எழுதியதை நான் படித்தேன். எனவே அப்படித் தான் ஒரு ஆய்வு நடந்திருக்கிறதேயொழிய வேறல்ல. இதிலே கருப்புசாமி ஏதாவது முயற்சி எடுத்து அவரே முன்னால் நின்று ஒரு ஆய்வை நடத்துவார்களேயானால் நாட்டுக்குப் பயனுடையதாக இருக்கும் என்று நான் கருது கிறேன். ஒருவேளை கடல் நீரில் இடுப்பளவுத் தண்ணீரில் வைத்து பிரசவம் செய்கிறபோது பிரச்சினை இல்லாமல், லேபர் பெயின் இல்லாமல் இருக்கிறது, குழந்தையும் வலு உள்ளதாக வரும் என்று நாம் கண்டுபிடித்தால் நிச்சயமாக மிகவும் பிரயோஜனமாக இருக்கும். ஒரே ஒரு பிரச்சினை தான் ஏற்படும். அதாவது கடலோரம் முழுவதும் பார்த்தால் அவர்களேதான் இருப்பார்கள். அந்த ஒரு பிரச்சினைதான் ஏற்படும். இருந்தாலும் பரவாயில்லை. வலுவான குழந்தைகள் கிடைக்கும் என்று சொன்னால் அதை நாம் தாங்கிக் கொள்ளலாம். எனவே திரு. கருப்புசாமி அவர்களே அதற்கு ஒரு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன். அரசிலேயும் முடிந்தால் நிச்சயமாக ஏதாவது ஆய்வு செய்வதற்கு வழி இருக்கிறதா என்பதை யோசிப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கருப்புசாமி ஏற்கனவே பிரசவம் பார்த்தே முடித்துவிட்டார்கள் என்றீர்கள். ஆனால் நீங்கள் அதுபற்றி ஒரு பெரிய ஆய்வையே நடத்தி முடித்து விட்டீர்கள். ஆகவே முழு அளவில் விளக்கம் வந்துவிட்டது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'தியரேட்டிக்கல் நாலெட்ஜ்' பற்றி மிக அதிகமாகக் கூறி இருக்கிறார்கள். ஆனால் ப்ராக்டிகல் பயிற்சி எடுப்பதற்காக மருத்துவர்களை ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு அனுப்பினால், என்னைப் போன்ற மருத்துவர்களை அனுப்பி வைத்தால் (சிரிப்பு) அந்தப் பயிற்சி பெற்றுவிட்டு வந்து அந்த முறையைப் பின்பற்ற வசதியாக இருக்கும் என்று நினைக் கிறேன். அதற்கு அமைச்சர் ஆவன செய்வார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அது ஆய்வு நிலையில்தான் இருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. அதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போகவேண்டுமென்று கேட்டிருக்கிறார் கள். நிறையபேர் கைனகாலாஜிஸ்ட் இருக்கிறார்கள். அவர் கள் போய் வந்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். அவர் போக வேண்டுமென்றால் நிச்சயமாக நாம் வழியனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறோம். அவர் அவருடைய பொறுப்பிலே போய் கண்டுபிடித்துக்கொண்டு வந்தால் இந்த நாட்டுக்குப் பயனுடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர். ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்டர் வாட்டர் பெர்த் என்ற நீருக்கடியில் பிரசவம் என்பதைப் பற்றி மிக அழகாக நம்முடைய மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த முறையை லிபா என்று சொல்லக் கூடிய ஒரு பிரெஞ்ச் டாக்டர் 1981-ஆம் ஆண்டு கண்டு பிடித்தார். அதற்குப் பின்னால் இந்த முறையானது, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடு களில்—இதிலே பேசுகிற போது சொன்னார்கள். குழந்தை பிறக்கிற போது அம்னியாட்டிக் ஃப்ளூயட் உள்ளே இருந்து அது போன்ற ஒரு திரவத்திற்குள்ளே வருகிறது என்று சொன்னார்கள். அந்தத் திரவமும், அந்தக் குழந்தை வெளியே வருகிறபோது இருக்கிற திரவமும்—ஐசோலெடிக் பாயின்ட் என்று சொல்வார்கள்—அந்த பாயின்ட்-லே இருக்கக்கூடிய நிலையிலே இருந்தால் அப்படிப் பிறக்கிற குழந்தைகள், சாதாரண முறையில் பிறக்கிற குழந்தைகளை விட மிகவும் புத்திசாலியாக இருக்கும் என்ற 'தியரி'-யைச் சொன்னார்கள். ஆனால் இன்னும் அது நடைமுறையில் நிரூபிக்கப்படவில்லை. இப்படிப் பார்க்கிறபோது இதற்கு கடல் நீரோ அல்லது பெரிய செலவோ இல்லை. இன்றைக் கும் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இதற்கென தொட்டிகள் இருக்கின்றன. அந்தத் தொட்டி களிலே அந்தத் தாயை 'ஸ்டவுட்டிங் பொசிஷனிலே' உட்கார வைத்து விடுவார்கள். மகப்பேறு சிகிச்சை செய்யக்கூடிய மருத்துவரும் அங்கே இருப்பார். இந்தக் குழந்தை பிறந்தவுடன் ஐசோலெட்டிக் பாயின்ட்-இல் இருக்கிற அந்த தண்ணீருக்குள் செல்லும். உடலில் இருக்கிற சீதோஷ்ணத்தை விட அது சற்றுதான் அதிகமாக இருக்கும். அதற்குள்ளே போனவுடனே குழந்தை தானே மேலே வரும். வந்தவுடனே அந்தக் குழந்தையை உடனடியாக எடுத்துவி

வேண்டும். அப்படிப் பிறக்கிற குழந்தைகளுக்கு சாதாரண நிலையில் பிரசவம் நடைபெறுகிறபோது ஏற்படுகிற ஷாக்கைவிட மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுவதால் அது மிகவும் புத்திசாலியாக எதிர்காலத்தில் வரும் என்று சொல்லி பெரிய ஆராய்ச்சி செய்தார்கள். ஆனால் அது இன்று வரை நிரூபிக்கப்படவில்லை. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கருப்புசாமி பயிற்சிக்காக தன்னை வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். இது தோல்வியடைந்த முறை என்பதை நான் இங்கே சொல்லிக் கொண்டு, அரசினுடைய பணம் வீணாகாமல் இருக்க மாண்புமிகு அமைச்சர் இதைத் தடுக்க முன்வருவாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அதைப் பற்றி அப்படி தண்ணீருக்குள்ளே பிறக்கின்ற குழந்தைகள் எப்படியெல்லாம் அறிவாளியாக இருக்கும் என்பதையெல்லாம் இங்கே தெரிவித்து கடைசியிலே இது ஃபெயிலியர் ஸ்கீம், எனவே அதற்காக பணம் செலவழிக்கக் கூடாது என்று சொன்னார்கள். இது ஒரு வேளை சக்ஸஸ்ஃபுல் ஸ்கீம்-ஆக இருந்தாலுங்கூட இந்த நேரத்திலே பணம் செலவழிப்பதற்கு நாம் நிச்சயமாகத் தயாராக இல்லை. அவ்வளவு சிரமம் இருக்கிறது என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் உபயோகமாக இருந்தால், நீங்களே அத்தனை வழிமுறைகளையும் இப்போது சொல்லி முடித்து இருக்கிறீர்கள். இது பயனுடையதாக இருக்கும் என்று நீங்கள் நம்பினால் நீங்களே கூட அந்த ஆராய்ச்சியை எடுத்துப் பார்க்கலாம் என்று நான் கருதுகிறேன். இதற்காக ஒரு பயிற்சியும் தேவையில்லை என்று நம்புகிறேன். நீங்கள் சொல்வதைப் பார்த்தால், நம்முடைய சட்டமன்றத்திலே நிறைய உறுப்பினர்கள் டாக்டர்களாக இருக்கிறீர்கள். நீங்களே கூட ஒரு 'டீம்'-ஐ அமைத்து நீங்கள் அதற்கான ஏற்பாட்டைச் செய்வீர்களேயானால், வேண்டுமென்றால் பிரசவத்திற்கு வேண்டுமானால் நாங்கள் ஆட்களை அனுப்பி வைக்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீருக்குள்ளே பிறக்காமலேயே நாமெல்லாம் இவ்வளவு பெரிய புத்திசாலிகளாக

இருக்கும்போது, நம்மை விடவா வேறு ஒரு புத்திசாலியை உருவாக்க வேண்டிய அவசியம் வந்து தண்ணீருக்குள்ளே போய்ப் பிறக்கச் செய்ய வேண்டியிருக்கிறது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 204. திரு. ஆர். ஈஸ்வரன். இருக்கையில் இல்லை.

வினா எண். 205, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. தா. வேடியப்பன் கேட்கிறார்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

205—

புதிய பேருந்துப் பணிமனைகள் ஏற்படுத்தல்.

*11559—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணிமனை (Bus Depot) இல்லாத சட்டமன்ற தொகுதிகளில் பணிமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பணிமனை இல்லாத சட்டமன்ற தொகுதிகளில் தேவைகளுக்கேற்ப சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பணிமனை இல்லாத சட்டமன்றத் தொகுதிகள் எங்கெங்கு இருக்கின்றன என்று ஆராய்ந்து, அதற்குண்டான நடவடிக்கை எடுத்து அடுத்த நிதியாண்டிலாவது, ஏற்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைகளுக்குகேற்ப என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல எல்லா இடங்களிலும், நகரப் பேருந்துகளை நாம் இயங்கிக்கொண்டிருக்கிறோம். சில இடங்களிலே